2017 ஜூலை 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 220, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

220—

பெயர் மாற்றம்

***26746—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்மரபினர் வகுப்பினை சீர்மரபினர் பழங்குடியினர் எனப் பெயர் மாற்றம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சீர்மரபினர் வகுப்பினரை சீர்மரபினர் பழங்குடியினர் எனப் பெயர் மாற்றம் செய்ய அரசு முன்வருமா என்ற வினாவினை ஆண்டிப்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். சீர்மரபினர் வகுப்பினை சீர்மரபினர் பழங்குடியினர் எனப் பெயர் மாற்றம் செய்ய தற்போதைய சூழ்நிலையில் வழிவகையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* British *காலத்திலிருந்து* Denotified Tribes *என்ற* certificate-*தான் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இடையிலே Denotified Community என்று மாற்றிவிட்டார்கள். என்ன காரணத்திற்காக மாற்றினார்கள் என்று தெரியவில்லை. இதில் 68 ஜாதிகள் பயன்பெறக்கூடிய வழிவகைகள் இருக்கின்றன. அந்த 68 ஜாதிகளுக்குமே தமிழ்நாடு அரசின் மூலமாக பலன் கிடைக்கிறதோ இல்லையோ, மத்திய அரசின் மூலமாக Tribes என்ற certificate கிடைத்தால் அவர்களுக்கு சில சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைத் தமிழக முதல்வர் பரிசீலனை செய்து, அந்த அரசாணையை இரத்து செய்து, மீண்டும் Denotified Tribes என்ற certificate–ஐ வழங்குவதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி சி. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மக்களின் சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டிற்காக பல்வேறு நலத் திட்டங்களையும், குறிப்பாக, 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினையும் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. நாடு விடுதலை பெறுவதற்கு முன்னர் ஆங்கிலேயர்களால் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்காக 1911 ஆம் ஆண்டு குற்றப் பரம்பரைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. நாடு விடுதலை அடைந்த பின்னர் இச்சட்டம் நீக்கம் செய்யப்பட்டு விட்டது. இச்சட்டத்தால் பாதிக்கப்பட்ட இனத்தவர்கள் சீர்மரபின பழங்குடியினர் என அழைக்கப்பட்டனர். 1978 முதல் 1983 ஆம் ஆண்டுகளுக்கான ஆதி திராவிடர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் இடைக்காலத் திட்டத்தைத் தயாரித்த மத்திய அரசின் நிலைக் குழுவின் அறிக்கையில் Denotified Tribes என்பது Denotified Communities என பெயர் மாற்றம் செய்ய கருத்து தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அரசாணை (நிலை) எண் 1310, சமூக நலத் துறை, நாள் 30–7–1979–ல் சீர்மரபினர் மற்றும் பழங்குடியினர் இனத்தினை, சீர்மரபினர் என மாற்றம் செய்து ஆணையிடப்பட்டு, சமுதாயத்தில் நடைமுறையில் இருந்து வருகிறது. தற்போது மாநில அரசின் சீர்மரபினர் வகுப்பினர் பட்டியலில் 68 ஜாதிகள் இடம் பெற்றுள்ளன. அவர்களுக்கும் மிகப்

2017 ஜூலை 18]

பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கும் சேர்த்து 20 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. சீர்மரபினர் வகுப்பினரை சீர்மரபினர் பழங்குடியினராகப் பெயர் மாற்றம் செய்வது குறித்து தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திடம் கருத்து கோரப்பட்டு, அவ்வாணையம் சமூக நலத் துறையால், 30–7–1979 அன்று சீர்மரபின பழங்குடியினர் இனத்தினை சீர்மரபினர் என மாற்றம் செய்து, ஆணையிடப்பட்டு நடைமுறையில் உள்ளது. இந்திரா சஹானி–எதிர்–மைய அரசு வழக்கில், இட ஒதுக்கீடு 50 விழுக்காட்டுக்கு மிகாமல் இருக்க வேண்டுமென்று இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினைச் செயல்படுத்தும்பொருட்டு, 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு கல்வி நிலையங்களில் இடங்களையும், மாநில அரசின்கீழ் வரும் பணிகளில் நியமனங்கள் அல்லது இடங்களை ஒதுக்கீடு செய்தல் சட்டத்தினை நிறைவேற்றியது. பின்னர், அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 39(1)(பி)–ன்கீழ் பாதுகாப்பு பெறும்பொருட்டு, மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 45/1994 இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 9–வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது. இட ஒதுக்கீடு சட்டம் குறித்த வழக்கு இந்திய உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. சீர்மரபினர் வகுப்பினை சீர்மரபின பழங்குடியினர் வகுப்பாகப் பெயர் மாற்றுவதற்கு தமிழ்நாடு சட்டம் 45/1994–ல் திருத்தம் செய்ய நேரிடும். மேற்படி சட்டத்தினைத் திருத்தம் செய்வது அரசின் இட ஒதுக்கீடு நிலைப்பாட்டிற்குக் குந்தகம் விளைவிப்பதாக அமைந்துவிடும் என்பதால் இப்பெயர் மாற்றம் செய்யத் தேவையில்லை என தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, சீர்மரபினர் வகுப்பினை சீர்மரபின பழங்குடியினர் எனப் பெயர் மாற்றம் செய்ய தற்போதைய சூழ்நிலையில் வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சீர்மரபினர் பழங்குடியினர்' என்று இருக்கும்போது அவர்களுக்கு நிறைய சலுகைகள் கிடைத்தன. 'சீர்மரபினர் வகுப்பினர்' என்று மாற்றப்பட்டபோது அவர்களுக்கு சலுகைகள் கிடைக்கவில்லை. '69 சதவிகித இட ஒதுக்கீடு வழங்குவதற்கு ஏதுவாக நாங்கள் மாற்றினோம்' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலிருந்து இதுவரைக்கும் வழங்கப்பட்ட சலுகைகள் திடீரென்று மறுக்கப்பட்டதற்குக் காரணம் என்னவென்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆகையினால், மீண்டும் சீர்மரபினர் பழங்குடியினர் என்று* tribes *என்ற அடிப்படையில் மாற்றம் செய்தால், சுமார் 68 ஜாதியைச் சார்ந்த மக்கள் பயன்பெறுவதற்குண்டான வாய்ப்பிருக்கிறது. எனவே, அதனை மாற்றுவதற்குண்டான செயலை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், அரசாணை எண் 1310 *என்ற ஒன்று இருக்கிறது. அதனை மாற்றம் செய்து, சீர்மரபினர் வகுப்பினர் என்பதை சீர்மரபினர் பழங்குடியினர் என்று மாற்றுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். இந்த 68 சாதியின மக்கள் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி மதுரையில் சுமார் 15 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். சென்னையில் சுமார் 15 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். ஆகையினால், அந்த மக்களுடைய கருத்துகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலனை செய்து, மாற்றம் செய்வதற்கு முன்வர வேண்டுமெனக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 69 விழுக்காடு இட ஒதுக்கீடு தொடர்பான வழக்கு இந்திய உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. அவ்வழக்கின் விசாரணை வருகின்ற ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது. மேற்படி வழக்கின் தீர்ப்பு கிடைத்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*